26.10.2022

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.205/2018

அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராபர்ட் | சாதி | |
| த/பெ | மத்தீயாஸ் | மதம் | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | |
| தாலுக்கா | | வயது | 42/2022 |
| மாவட்டம் | | தேதி | |

( 26.10.2022 ) இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் விழுப்புர்த்தில் அறிஞர் அண்ணா கலைக்கல்லூரி அருகில் குடியிருக்கிறேன். கேட்டரிங் தொழில் செய்கிறேன். லோகஷ் என்வரை எனக்கு தெரியாது. ஆஜர் 1 முதல் 5 வரை எதிரிகளை எனக்கு தெரியாது. நான் விழுப்புரம் ரயில்வே காவல்நிலையத்திற்கு சென்றது இல்லை. எனக்கு இந்த வழக்கு தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. விழுப்புரம் ரயில் நிலையத்தில் புத்தகம் விற்கும் ஜெயவேல் என்பவரை எனக்கு தெரியாது. இந்த வழக்கு தொடர்பாக வேலுர் சிபிசிஐடி காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தரா என்றால் இல்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

லோகேஷ் என்ற லோகேஷ்குமார் என்ற போலீஸ்காரர் எனது நண்பர் என்றும் கடந்த 2014ம் வருடம் மே மாதம் ஒரு நாள் மாலை லோகேஷ் என்னை போனில் தொடர்பு கொண்டு ரயில் நிலையத்தில் புத்தகம் விற்கும்

ஜெயவேல் என்பவரை பிக்பாக்கெட் திருட்டு வழக்கில் காவல்நிலையத்தில் 2 நாட்கள் வைத்து அடித்து விசாரித்தபோது அவன் செத்துட்டான் என்றும் எங்களுக்கு வேலை போயிட்டது என்றும் நீ எங்களுக்கு சாட்சி சொல்லனும் என்றும் சொன்னார் என்றும், எனக்கு பாவமாக இருந்ததால் சாட்சி சொல்வதாக சொன்னேன் என்றும், லோகேஷ்குமார், ரயில்வே இன்ஸ்பெக்டர் மற்றும் போலீசார் சொல்லிக் கொடுத்தது போல கடந்த 2014 மே மாதத்தில் நான் சென்னைக்கு போக டிக்கெட் எடுக்க வேண்டி ரயில்வே ஸ்டேஷ்ன் வந்தபோது ஒருவர் பிக்பாக்கெட் அடித்து ஓடியதாகவும், பொதுமக்கள் மற்றும் பர்ஸ்சை இழந்த நபரும், நானும் அந்த நபரை பிடிக்க ஓடினோம் என்றும், ஓடும்போது அந்த நபர் கீழே விழுந்ததில் அடிப்பட்டது என்று சொல்லிக்கொடுத்தார்கள் என்றும் அதை அப்படியே போலீஸ் விசாரணையிலும், விழுப்புரம் நீதித்துறை நடுவர் விசாரணையிலும் சொன்னேன் என்றும், உண்மையில் நான் ரயில்வே் ஸ்டேசன் போகவும் இல்லை என்றும், யாரையும் துரைத்தி பிடிக்கவும் இல்லை என்றும், அந்த மாதிரி நிகழ்வுகளை பார்க்கவில்லை என்றும் லோகேஷ் எனது நண்பர் என்பதால் அவர் சொன்னதால் அவ்வாறு சொன்னேன் என்றும் ஜெயவேல் என்ற நபரை யார் என்று எனக்கு தெரியாது என்றும், பிக்பாக்கெட் வழக்கு பற்றி எனக்கு தெரியாது என்றும், ரயில்வே போலீஸ் டிஎஸ்பி யாரும் என்னை விசாரிக்கவில்லை என்றும், சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் சிபிசிஐடி காவல் ஆய்வாளர் விசாரணையில் நான் சொன்னேன் என்றால் சரியல்ல. தற்சமயம் எதிரிகளை காப்பாற்ற உண்மைக்கு புறம்மாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-</u> இல்லை.